[1990 ஏப்ரல் 17

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய ஆட்சியில் அனைத்தும் நடக்கும் என்பதை உறுப்பினர் அவர்கள் மனப் பூர்வமாக ஏற்றுக்கொண்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய எண்ணத்தினுடைய எதிர் பார்ப்புகளைப் போலவே இந்த ஆண்டு 20 படுக்கைகளை அங்கே அதிகரிப்பதற்காக அரசினுடைய கருத்துருவில் இருக்கிறது. நிதி நிலையைப் பொறுத்து அதற்கான அனுமதிகளை அரசு வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடப்பாடி நகர அரசு பொது மருத்துவமனை.

* 5321 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

எடப்பாடி நகர அரசு பொது மருத்துவமனையில் அதிக டாக்டர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. க. பழனிசுவாமி : எடப்பாடி அரசு பொது மருத்துவ மனைக்கு அதிக நோயாளிகள் வருகின்ற காரணத்தினால் டாக்டர்கள் குறைவாக இருப்பதால் பல மணி நேரம் நோயாளிகள் காத்திருக்கவேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக அதிகமாக மருத்துவமனைக்கு சிகிச்சை பெற குழந்தைகள் வருவதால் அவர்களுக்காவது குழந்தைகள் சிகிச்சை பிரிவு என்று தனியாகத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே இப்போது 26 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை செயல்படுகின்றது. அந்த எண்ணிக்கை உள்ள மருத்துவமனைக்கு 3 மருத்துவர்கள் மட்டுமே நியமிக்கப்படுவது வழக்கம். அங்கே 3 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மருத்துவர்களுடைய எண்ணிக்கையைக் கூட்டுகின்ற யோசனை எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 17]

10-10 மணி

திரு. க. பழனிசுவாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எடப்பாடி அரசு பொது மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டர் இருக்கின்றது. எக்ஸ்ரே பிரிவு புதிதாகத் துவங்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் நோயாளிகளுக்கு ஆபரேஷன் செய்வது என்றால் அவர்களை சேலம் மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்புகிறார்கள். அதை மாற்றி, அங்கேயே ஆபரேஷன் செய்ய எம். எஸ். பட்டப் படிப்பு படித்த டாக்டர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே நியமிக்கப்பட்டு இருக்கின்ற மூன்று மருத்துவர்களில் ஒரு எம்.எஸ்.-ஐ நியமிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*6472 திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதனை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பொன்மலைக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவக்கப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

(ஆ) பணிகளைத் துரிதப்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகள் 1991ஆம் ஆண்டு ஜூனுக்குள் நிறைவேற்றப்படும். இந்தப் பதிலினை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்து பேசி அன்றே முடிவெடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதை விரைவுபடுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை எடுத்திருப்பது குறித்தும் உறுப்பினரவர்களுக்குத் தெரியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS